

ஆசிரியரிடமிருந்து........!

# இயேசுவைக் கவனிப்போம்! இயேசுவைப்போல வாழுவோம்!

இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவரைப் போல வாழ வேண்டும், அவருடைய சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. தேவன் நம்மை அவருடைய குமாரனாகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்து இருக்கிறார் (ரோமர் 8:29). ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகிறோம் என்று பவுல் கூறுகிறார் (2கொரி.3:18). மேலும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டும் என்பதே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே. 4:13). நாம் இயேசுவைப் போல வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இயேசுவின் வாழ்க்கையை சற்று கவனித்துப் பார்த்து அவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற தீர்மானிப்போம் (எபி. 3:1).

## 1. இயேசுவைப் போலக் கீழ்ப்படியுங்கள் : *Obey like Jesus*

கிறிஸ்துவின் சிந்தைக் கீழ்ப்படிதலின் சிந்தை. அவர் தனது முதல் 30 ஆண்டுகளில் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நல்ல யூதனாக வாழ்ந்தார். தன்னுடைய பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்.2:51). அவர் தேவ குமாரனாயிருந்தும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று வேதம் கூறுகிறது (எபி. 5:8). இயேசு பிதாவுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த வாழ்க்கை வாழ்ந்தார். தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவதே அவருடைய உணவாயிருந்தது (யோவான் 4:34). பிதாவின் சித்தம் செய்வதைத் தன்னுடைய குடும்பத்தைக் காட்டிலும் (மத். 12:46-50), தன்னுடைய சொந்த விருப்பத்தைக் காட்டிலும் (லூக்கா 22:42), தன்னுடைய சொந்த ஜீவனைக் காட்டிலும் (பிலி.2:8) முக்கியமாகக் கருதினார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதே அவருடைய பிரதான விருப்பமும், தாகமும், வாஞ்சையுமாயிருந்து (யோவான். 5:30 ; 14 : 31). ஆகவே இயேசுவைப் போல வாழ விரும்புகிற ஒவ்வொருவரும் அவர் கீழ்ப்படிந்தது போல கீழ்ப்படிய வேண்டும். பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1சாமு. 15:22).

## 2.இயேசுவைப் போல வேதத்தைப் படியுங்கள் : *Study the Bible like Jesus*

தேவனுடைய வார்த்தை இயேசுவின் வாழ்க்கையில் பரிபூரணமாக வாசமாயிருந்தது. 12 வயதில் தன்னுடைய வேத அறிவால் வேதப் பண்டிதர்கள் பலரை பிரமிக்கச் செய்தார் (லூக்கா 2 :46,47). இயேசுப் பழைய ஏற்பாட்டை நன்றாகக் கற்று மனனம் செய்து தன்னுடைய

சம்பாஷனையிலும், சோதனை நேரத்திலும் பயன்படுத்தினார் (மத்.4:10; லூக்கா 23:46). இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (யோவான் 7:15). நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? என்று இயேசு பலமுறை கேட்பதைப் பார்க்கிறோம் (மத். 12:3,5; 19:5; 21:42; 22:3). அவர் நன்றாக வேதத்தை வாசித்திராத பட்சத்தில் அப்படிக் கேட்டிருக்க முடியாது. ஆகவே இயேசு கூறியபடி தினமும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து அவரைப் போல மாறுவோம் (யோவான் 5:39).

## 3. இயேசுவைப் போல ஜெபியுங்கள் : *Pray like Jesus*

இயேசுவினுடைய ஜெப வாழ்க்கையைக் கண்டு ஆச்சரியப்பட்ட சீஷர்கள் தங்களுக்கும் ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள் (லூக்கா 11:1). வனாந்தரமான இடங்களுக்கும், மலைகளுக்கும் சென்று தனித்து ஜெபிப்பது அவருடைய பழக்கமாயிருந்தது (மத்.14:23; மாற்கு 6:46; லூக்கா 5:16). இயேசு அதிகாலையில் பிதாவின் முகத்தைத் தேடினார் (மாற்கு 1:35). இராமுழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12) என்று வேதம் கூறுகிறது. ஜெபம் அவருடைய வழக்கமாகவும், சுவாசமாகவும் இருந்தது. இயேசு மற்றவர்களுக்காக ஜெபித்தார் (லூக்கா 22:32; 23:34), ஊக்கத்தோடே ஜெபித்தார் (லூக்.22:24), கண்ணீரோடே ஜெபித்தார் (லூக்கா19:41), பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்து ஜெபித்தார் (மத்.26:39-54), ஸ்தோத்திரத்தோடே ஜெபித்தார் (மத்.15:36; லூக்கா 9:16). அவர் இன்றும் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் (எபி. 7:25). ஆகவே நாமும் அவரைப்போல ஜெபிக்க அர்ப்பணிப்போம். குறிப்பிட்ட இடத்தில் நேரத்தில் அவரோடு உறவாடப் பழகுவோம், ஜெப வீரர்களாய் மாறுவோம்.

## 4. இயேசுவைப்போல அன்பு கூறுங்கள் : *Love like Jesus*

நான் உங்களிடத்தில் அன்பு கூறுவதுபோல, நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருங்களென்று இயேசு கூறினார் (யோவான் 13:34). கிறிஸ்துவே நமக்கு அன்பு கூறுவதில் சிறந்த மாதிரி. கிறிஸ்துவின் அன்பு மற்றவர்களுடைய நலனைத் தேடும் அன்பு, கொடுக்கும் அன்பு, தியாக அன்பு, ஆசீர்வதிக்கும் அன்பு, மன்னிக்கும் அன்பு (லூக்கா 7:36-50; மாற்கு 1:40-42; யோவான் 20:24-29;21:5-19,8:1-11). இயேசு சமுதாயத்தினால் மறக்கப்பட்டவர்கள், வெறுக்கப்பட்டவர்கள் மற்றும் தள்ளப்பட்டவர்களை நேசித்து, ஆசீர்வதித்து புதுவாழ்வைக் கொடுத்தார். கிறிஸ்துவின் அன்பின் உச்சக்கட்டத்தைக் கல்வாரி சிலுவையில் காண்கிறோம். அது தம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்த அன்பு (யோவான் 15:13;1 யோவான் 3:16). ஆதலால் இயேசு நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் (எபே.5:1,2).

## 5. இயேசுவைப்போலத் பரிசுத்தமாயிருங்கள் : *Be Holy like Jesus*

பரிசுத்த வாழ்க்கைக்கு இயேசு நமக்கு சிறந்த முன்மாதிரி. இயேசுவினுடைய பரிசுத்தம் அவர் அக்கிரமத்தை வெறுத்து, நீதியை விரும்பினதில் விளங்குகிறது. (எபி.1:9). இயேசு வார்த்தைகளிலும் செய்கையிலும் பரிசுத்தராயிருந்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனையோ, பொய்யோ காணப்படவுமில்லை (1 பேதுரு 2:22; யோவான் 8:46; 1யோவான் 3:5). அவர் எப்பொழுதுமே தேவனுக்குப் பிரியமானவைகளையே செய்து வந்தார் (யோவான் 8:9; மத்தேயு 17:5). அவர் எல்லா விதத்திலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருந்தார் (எபி. 4:16).

அவருடைய பரிசுத்தத்தைக் குறித்து அநேகர் சாட்சி கொடுத்தார்கள். இவர் தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையென்று சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி ஒருவன் கூறினான் (லூக்கா 23:41). நான் இவரில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று பிலாத்து கூறினார் (லூக்கா 23:4). மெய்யாகவே இவர் நீதிபரர் என்று ஒரு நூற்றுக்கு அதிபதியும் (லூக்கா 23:47), குற்றமில்லாதவரரென்று அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அறிக்கையிட்டனர் (மத்.27:4). பிலாத்துவினுடைய மனைவி அவர் நீதிமானென்று கூறினாள் (மத். 27: 19). இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று இயேசு சவால் விட்டுக் கூறினார் (யோவான் 14:30). ஆகவே நாமும் அவரைப் போல நம்முடைய எல்லா நடக்கையிலும் பரிசுத்தமாயிருப்போம் (1 பேதுரு 1: 15).

### 6. இயேசுவைப்போல தாழ்மையாயிருங்கள் : *Be Humble like Jesus*

இயேசுவின் சிந்தை தாழ்மையின் சிந்தை. நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்று இயேசு கூறினார். (மத்.11:29). தன்னை தாழ்த்தி இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்தார். மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் (லூக்கா 2:7). பாவிகளின் சிநேகிதனாக வாழ்ந்தார் (மத்.11:19). சீஷர்களின் கால்களை கழுவினார் (யோவான் 13:12-17). சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தினார் (பிலி.2:8). தாழ்மையைக் கற்றுக் கொடுத்தார் (மத். 18:1-4; லூக்கா 14:7-11). மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார் (நீதி.15:33;18:12; பிலி. 2:9-11).

### 7. இயேசுவைப்போல ஊழியம் செய்யுங்கள்: *Serve like Jesus*

இயேசு மற்றவர்களுக்கு ஊழியம் செய்யத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படிக்கே வந்தார் (மாற்கு 10:45). இயேசு சாதாரண வேலைக்காரர்கள் செய்யும் வேலையையும் செய்யத் தயங்கவில்லை. சீஷர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவான் 13: 1-5,15-17; லூக்கா 22:27). வியாதியஸ்தர்களுக்கு சுகம் தந்தார் (லூக்கா4:40). பசித்தவர்களுக்குப் போஜனம் கொடுத்தார் (மத்.15: 22). போஜனம் பண்ணவும் சமயமில்லாத அளவிற்கு ஜனங்களை முன்வைத்து ஊழியம் செய்தார் (மாற்கு 3:20). பட்டணங்கள், கிராமங்கள்தோறும் சுற்றி நடந்து சுவிசேஷத்தை அறிவித்தார் (மத்தேயு 4:23). ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார் (அப்.10:38).ஜனங்களுக்காக மன்றாடினார். ஜனங்களுக்கு வசனத்தைப் போதித்தார். ஜனங்களுக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இயேசுவின் சீஷர்கள் அவருடைய வழியில் ஜனங்களுக்கு ஊழியம் செய்தனர் என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

தேவ ஜனமே, இயேசு நமக்கு மாதிரியை வைத்துச் சென்றிருக்கிறார் (யோவான் 13: 15; 1 பேதுரு 2:21). நாம் அந்த மாதிரியைப் பின்பற்றுவோம். இயேசுவைப் போல மாறுவோம். அவ்வுலகை இயேசுவின் பக்கம் திருப்புவோம்.

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.